உ

மதுரை

# மீனாட்சியம்மன்

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோன்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோன்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும் அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் ஸில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்டியார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபிலில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோள்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

உ

அம்பாள் துணை.

# ம து ரை

# மீனாக்ஷியம்மன்

அறுசீரடியாசிரியவிருத்தம்.

---

எனக்கு அயன் விதிப்படிமெய்யா
　புருவத்தில்செயல்தானோ வேதோவம்மா
உனக்கடிமை யானபின்பு
　யேதுகுறைவந்தாலும் யுனக்கேபாரம்
வனக்கிளியே மலர்த்திருவே
　சொக்கரிடபங்கில்வளர் வனசமாதே
யென்மனக்கவலை யார்க்குரைப்பேன்
　யெனக்கிரங்கவேண்டுமம்மா மதுரைவாழ்வே.
இனம்பிரிந்த மானதுபோல்
　உடல்பதைத்துவளுமையோடிளைத் தென்னாளும்

மனம்பதரி உளன்றுளன்று
அடியேனுக்கருள்சொற்ற வல்நெஞ்சோதான்
நிசம்படைத்த பெருக்கமதோ
திருவனந்தம்பராமுகமோ தாயேயென்மேல்
வனம்பரவிக் கடம்பவனே
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. (உ)
தாயிழன்ற கன்றதுபோல்
பரதவித்துநிலைகுலைந்து தவித்தென்னாளும்
தீயிலுறும் மெழுகதுபோ
லுருகிமனம்வெருங்கூடாய் திகைத்தேனம்மா
தூயர்மலர் புரந்திருவே
நடம்புரியும்பதத்தாளே தோகைமாதே
மாயவற்கு சகோதரியே
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. (ங)
பொல்லாத நெடுநீலி
பழிக்கஞ்சிபழிசுமக்கத் போராய்போராய்
சொல்லாத நாளுமுண்டோ
சொன்னாலுங்கேட்கிலேயோ யென்சொற்கூந்தல்
யெல்லாரும் வாழ்ந்திருக்க
நானொருவன்தாழ்ந்திருக்க இயலோ அம்மா

வல்லாறு களபமுலை
　மாமயிலேமீனாட்சி மதுரைத்தாயே. (௪)
இருபொழுது வருமையினா
　லனுதினமும்பிணியதனா லிளைத்துவாடி
உருகுவது அயன்விதியோ
　அல்லவென்றாலுன்செயலோ உரைக்கமாட்டேன்
திருவுருவே அருளொளியே
　தெள்ளமுர்தேசேயிழையே தேவர்போற்றும்
மருவணியுங் குழலணங்கே
　சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. (ரு)
நஞ்சுகின்ற பேயதுபோ
　லுடல்மயங்கிவருமையினா னலிந்தென்னாளும்
சஞ்சலமே சமுத்திரமா
　யலையதனில்துரும்பதுபோல் தவித்தேனம்மா
கொஞ்சுகிளி மொழியாளே
　கஞ்சமலர்கரத்தாளே தோகைமானே
வஞ்சியிடை திருவனங்கை
　சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. (சு)
அதிமதுர விதரணம்
　பாடுவதுஉன்செயலோ அதுவல்லாமல்

நதிதரித்தோ ரிடப்பாகம்
விளங்குகின்றமாமயிலே நளினமான
கெதிபெறவே யடியேனுக்
குனதுபதந்தருளுவாய் கிருபைவைத்து
மதினுதல்போல் திருவனங்கை
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. (எ)
உலையிலிடு மெழுகதுபோ
லுருகிமனம் வெருங்கூடா யுலர்ந்துவாடி
நிலைகுலைந்து மதிமயங்கி
நின்றுமிகபரதவிக்க நீதியோசொல்
கலைமகளே வடிவனங்கை
கமலமுகத்திருமாதே கருணையாளே
மலைமகளே அரந்தழைகரும்
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. (அ)
இளமைதனில் வருமையினால்
மனதுமிகநொந்துருகி இடைந்துவாடி
விளைநிலத்தில் களர்விழுந்த
வாரதுபோலடியேனும் விளங்குகின்றேன்
குளையுடச்சி யன்னனடை
குயில்மொழிச்சி நீகருணை கூர்ந்துரட்சி

மழலைமொழி குயிலனங்கை
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. (௬)

திடமுடனே யுனைப்பாட
செல்வம்வுண்டாம்கல்வியுண்டாம் சிறப்பதாக
அடவுடனே யிப்புவியில்
யெந்தனுடமொழிக்கிரங்கி யருளேசெய்து
சடைமுடியா ரிடப்பாகம்
பச்சைநிறமாம்நின்ற தையல்மானே
மடமயிலே உன்னுடைய
மலர்ப்பாதந்தந்தருளுவாய் மதுரைத்தாயே. (௭)

## மதுரைமீனாட்சியம்மன்

அறுசீரடியாசிரிய விருத்தம்.

முற்றிற்று.